பொன். செந்தில்குமார்

# "இயற்கை, உங்கள் கைப்பொருள் இல்லை!"

## பசுமை பேசும் சத்குரு

சத்குரு ஜக்கி வாசுதேவின் 'ஈஷா பவுண்டேஷன்' என்ற அமைப்பை அறியாதவர்கள் மிகக்குறைவு. அந்த அமைப்பின் மூலம் பசுமைக் கரங்கள், கிராமப் புத்துணர்வு... என ஆக்கப்பூர்வமான பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறார் ஜக்கி வாசுதேவ். பசுமைக் கரங்கள் திட்டம் மூலம், கோடிக்கணக்கில் மரம் வளர்க்கும் முயற்சியில் இறங்கியிருப்பதற்காக **'இந்திராகாந்தி சுற்றுச்சூழல் விருது'** சமீபத்தில் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ஆன்மிக குருவாக அடையாளம் காணப்படும் அவரிடம் பேச்சுக் கொடுத்தால்... மரம் வளர்ப்பு, இயற்கை விவசாயம் என்று தேர்ந்த விவசாயி போல உற்சாகமாகி விடுகிறார்.

"இயல்பிலேயே உற்சாகமாக இருப்பவர்களை பாலைவனத்தில் கொண்டு போய் விட்டால் கூட, அங்கு மகிழ்ச்சியாகத்தான் இருப்பார்கள். சமீபத்தில் நான் இஸ்ரேல், சிரியா... போன்ற பாலைவன நாடுகளில் பயணம் செய்தபோது நேரடியாகவே பார்த்தேன். அந்த நாடுகளிலெல்லாம் புல், பூண்டுகூட முளைப்பதில்லை. ஆனாலும் அந்த மக்களுக்கு உற்சாகத்துக்கு குறைவேயில்லை. ஆனால், நாம் அனைத்து வளங்களையும் கொண்டிருந்தும், நமக்கு உடலில் பலமில்லை... மனதில் தெம்புமில்லை.

தமிழ்நாட்டு விவசாயத்துக்கு 12 ஆயிரம் ஆண்டுகள் பாரம்பர்யம் உண்டு. இவ்வளவு பாரம்பர்யம் மிக்க சமூகம் உலகில் வேறு எங்குமே கிடையாது. தகுந்த நேரத்தில் உழுது, விதைத்து, அறுவடை செய்து ஊருக்கு எல்லாம் சோறு போட்ட நிலத்தை நம் முன்னோர்கள், வெறும் மண்ணாக பார்க்காமல் தாய் போலத்தான் நினைத்தார்கள். அப்படிப்பட்ட நிலங்களையெல்லாம் நவீனம் என்ற பெயரில் பாலைவனமாக மாற்றி வைத்திருக்கிறோம்.

**"இயல்பிலேயே உற்சாகமாக இருப்பவர்களை பாலைவனத்தில் கொண்டு போய் விட்டால் கூட, அங்கு மகிழ்ச்சியாகத்தான் இருப்பார்கள்"**

1998-ம் ஆண்டிலேயே அமெரிக்க நிபுணர்கள் குழு, 'இன்னும் 25 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 60% பகுதிகள் அழியப் போகின்றன' என்று அறிவித்தது. அந்த அறிக்கை மீது எனக்கு நம்பிக்கை வராததால், நானே தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து பார்த்தேன். அப்போதுதான் உண்மையிலேயே தமிழகம் மோசமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். 33% என்று இருந்த காடுகளில் தற்போது 16.4% மட்டுமே எஞ்சி இருக்கிறது. அதை மனதில் கொண்டு நாங்கள் கணக்கு போட்ட போதுதான், எட்டு ஆண்டுகளுக்குள் 11.5 கோடி மரங்களை நடவு செய்துவிட்டால், அடுத்த 15 ஆண்டுகளில் மீண்டும் 33% பசுமையை மீட்டெடுக்க முடியும் என்று முடிவு செய்தோம்.

இதைக் கேள்விப்பட்டவுடனேயே '11 கோடியா!' என்று பலரும் வாய் பிளந்தார்கள். தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6 கோடி. அனைவரும் ஆளுக்கொரு கன்று வைத்து வளர்த்தாலே பாதி நிறைவடைந்து விடும். அடுத்த இரண்டாண்டுகளில் மீண்டும் ஒரு தடவை ஆளுக்கொரு கன்று வைத்தால் தாராளமாக 12 கோடி மரங்கள் எழுந்து நிற்கும். அதற்காக 2004-ம் ஆண்டில் தொடங்கப்பட்டதுதான் 'பசுமைக் கரங்கள்' திட்டம்.

ஆறு ஆண்டுகளுக்குள் 20 லட்சம் தொண்டர்கள், 82 லட்சம் மரக் கன்றுகளை நடவு செய்துள்ளார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பசுமை அளவு 4.2% கூடியுள்ளது என்று கூகுள் இணையதளம் சொல்கிறது. எங்கோ கிராமத்தில் உள்ள விவசாயி, தொண்டுள்ளம் கொண்ட குடும்பப் பெண்மணிகள், பள்ளி மாணவர்கள்... என்று பலரது பங்களிப்புக்கு கிடைத்ததுதான் இந்திரா காந்தி விருது. அவர்களின் பிரதிநிதியாகத்தான் அதை நான் பெற்றுக் கொண்டேன்" என்றவர், தான் விவசாயம் செய்த அனுபவங்களைச் சொல்லத் தொடங்கினார்.



சத்குரு ஜக்கி வாசுதேவ்

"கர்நாடக மாநிலம், மைசூரை ஒட்டியுள்ள பகுதியில் எங்கள் குடும்பத்துக்குச் சொந்தமான நிலம் இருந்தது. கல்லூரிப் படிப்பை முடித்த நான், புதுமையாக எதையாவது செய்ய வேண்டும் என்று அலைந்த காலத்தில்தான், விவசாயத்தின் பக்கம் கவனம் சென்றது. சளைக்காமல் தினமும் 14 மணி நேரம் வரைகூட வயலில் வேலை செய்தேன். முதன்முதலாக நான் சாகுபடி செய்தது முட்டைக்கோஸ். அதில் அமோக விளைச்சல் கிடைத்தது. ஆனால், சந்தைக்குக் கொண்டு சென்றபோது, ஒரு கோஸ் 25 பைசா வீதம் கேட்டு அதிர்ச்சி அடைய வைத்தனர். ஊர் முழுக்க கோஸ் விளைந்தால் எப்படி நல்ல விலை கிடைக்கும்? அதுமட்டுமல்ல, விவசாயத்தின் போக்கையே நாம் மாற்றிவிட்டோம்.

இந்த இடத்தில் ஒரு கதை சொன்னால் பொருத்தமாக இருக்கும். 'விவசாயி ஒருவன் நான் நினைக்கும்போது, மழை பெய்ய வேண்டும், காற்று அடிக்க வேண்டும், வெயில் அடிக்க வேண்டும் என்று இயற்கையிடம் வரம் கேட்டான். அவனுக்கு அந்த வரம் வழங்கப்பட்டது. விதை, விதைக்க வானத்தைப் பார்த்து நின்றான். 'மழை வேண்டும்' என்றால் உடனே பொழிந்தது. வெயில் கேட்ட போது, கிடைத்தது. வயல் முழுக்க நெல் விளைந்து நின்றது. விவசாயிக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அறுவடை செய்த நெல், மலை போல குவிந்து கிடந்தது. பதம் பார்க்க நெல்லை எடுத்து, உடைத்துப் பார்த்தான் எல்லாம் பதறாக இருந்தது. 'ஐயோ இப்படி நடந்துவிட்டதே' என்று இயற்கையிடம் அழுதான். 'நீ கேட்ட போதெல்லாம், பயிருக்கு தேவையான மழை பெய்ய வைத்தேன், காற்று அடிக்க வைத்தேன்... ஆனால், அனைத்தையும் நீ பருவம் இல்லாத நேரத்தில் செயற்கையாக செய்து கொண்டாய். அதனால்தான் அதிக விளைச்சல் கிடைத்தாலும், அனைத்தும் பதறாகப் போனது' என்று சொன்னதாம் இயற்கை'.

இயற்கையை மாற்றி வைக்க நினைப்பதைப் போன்ற முட்டாள்த்தனம் எதுவும் கிடையாது என்பதை உணர்த்தத்தான் இந்தக் கதை. இயற்கைதான் எல்லாம் என்று உணர்வதுதான் வாழ்வின் உன்னதம். இதைத்தான் விவசாயியாக நான் கற்றுக் கொண்டேன்" என்று மேலே கைக்கூப்பினார் சத்குரு ஜக்கி வாசுதேவ்.

படம்: என். விவேக்